DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.377/2024**

PROSECUTION WITNESS No. 4

| | | |
|---|---|---|
| Name | : ராஜா முனீஸ்வரன் |
| Father's Name | : பாண்டியன் |
| Age | : 35 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the $27^{th}$ day of January, 2026.

---

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது T5 வானகரம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 29.02.2024 அன்று வில்லிவாக்கம் வி1 காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணிபுரிந்த போது, நிலைய குற்ற எண்.71/2024 சட்டப்பிரிவு 174 குவிமுச வழக்கு சம்பந்தப்பட்ட இறந்த கௌஷா பாஷா என்பவருக்கு பிரேத பரிசோதனை செய்வதற்காக காவல் உதவி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை நான் பெற்று காலை 10.30 மணியளவில்

ஸ்டான்லி மருத்துவமனை சென்று சட்டம் சார்ந்த மருத்துவத் துறை பேராசிரியர் அவர்களிடம் கடிதத்தை ஒப்படைத்து இறந்து போன கௌஷா பாஷாவின் உடலை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை செய்ய உதவியாக இருந்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தை அவரது அண்ணன் வசம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை முடிந்து மறுநாள் பிரேதத்தின் உடல் உள்ளுறுப்புகளை மூடி முத்திரையிடப்பட்ட கொள்கலனில் பெற்று தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன், அத்தாட்சி பெற்று உதவி ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக காவல் உதவிஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

வேண்டுகோள் கடிதத்தோடு வழக்கின் வரலாறு மற்றும் விபத்துப் பதிவேடு நகல் இணைத்து வழங்கப்பட்டதா என்றால் ஆமாம்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
|---|
| **Principal Judge** |